## ஆசிரியரின் குறிப்புகள்...




**ஸ்ரீ** ஸ்ரீநிவாஸ நிகேதனத்தின்
பக்தர்களுக்கு அநேக நமஸ்காரங்கள்.

*மலர் போன்று மணம் வீசும் மனம் வேண்டும் தாயே*
*பலர் போற்றி பாராட்டும் குணம் வேண்டும் தாயே.*

# அன்னபூர்ணா தேவியின் தீபாவளி தரிசனம்

நம் குருநாதர் ஸ்ரீ ஸீதாராம் ஸ்வாமிகளுக்கும், அன்னை தாரா மாதாவுக்கும் நாம் நமஸ்காரம் செய்யும்பொழுது வெவ்வேறு உணர்ச்சிகள் மனதில் தோன்றுகிறது.

ஸ்ரீ ஸ்ரீ நிவாஸ நிகேதனத்தில் வணங்கும்போது நம் குறைகளை இவரிடம் சமர்ப்பித்துவிட்டோம். அவரும் பயப்படாதே தைரியமாகப் போ. நான் சரிசெய்து விடுகிறேன் என்ற வார்த்தைகள் கேட்டவுடனேயே நம் மனக்குறைகள் எல்லாம் தீர்ந்துவிட்டன என்பன போன்ற நிறைவு ஏற்படுகிறது.

கைங்கர்ய பரங்களின் கூட்டம் சில சமயம் நடைபெறும். சென்றமுறை நடத்திய விழாக்களில் எவையெல்லாம் திருப்திகரமாக செய்தோம். அடுத்து வரும் விழாவில் எப்படி மேலும் நன்றாகச் செய்யலாம் என்பனவற்றை கருத்து பரிமாற்றல் மூலம் குறைகளும் நிறைகளும் நினைவு கூர்வோம். முடிவில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஏதாவது ஒரு வேதத்தின் உட்பொருளை நன்கு உணர்த்துவார். அப்பொழுது நாம் செய்யும் சேவைகளை பரமனுக்கு சமர்ப்பணம் செய்யும் வழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். க்ருஷ்ணார்ப்பணம் என்பது அதுதான் என்பதைக் கேட்ட நமக்கு நாம் செய்யும் ஒவ்வொரு சேவையும் எவ்வளவு மேன்மையானது, சிறப்பானது, தெய்வீகமானது என்பதை அறிந்து அதை சந்தோஷமாக செய்கிறோம்.

திருவோண தீபத்தின்போது அவர் நேர்மையான மௌனம் காப்பார். அவரை மரியாதையுடன் விழுந்து நமஸ்காரம் செய்து,

காணிக்கைகளை செலுத்திவிட்டு வருகிறோம். அவருடைய நாக்கில் கற்பூரத்தை ஏற்றி சகல கல்யாண குணங்களையுடைய பரம்பொருளை ஆவாஹனம் செய்துவிட்டு அருள்வாக்கு அருளுகிறார். அப்போது இவருக்கு இவ்வளவு க்ஞானம் எங்கிருந்து வந்தது? நம் மனதில் உள்ள குறைகளை வெகுவேகமாக நாம் சொல்லாமலேயே சொல்கிறாரே. அதன் ரகஸ்யம் என்ன? அவரின் தரிசனத்தாலேயே அவர் கையில் வைத்திருக்கும் தரிசனத்தாலேயே நமக்கும் தெய்வத்தன்மை கிடைத்து விட்டது என்பது போன்ற உணர்வுகளுடனேயே வெளியில் வருகிறோம்.

இன்னும் எப்படியெல்லாம் பகவானுக்கு சேவை செய்யலாம் என்ற எண்ணமும் நம்முள் உண்டாகிறது.

சரி. இதுவரை நம் குறைகளை மட்டும் அவரிடம் தெரிவித்து பரிகாரம் தேடிக்கொள்கிறோம்.

ஆனால், அவரிடம் ஒன்றும் கேட்காமல் அவரின் தரிசனமே போதும் என்னும் மன நிறைவும் ஒரு சமயம் வருகிறது. அதுதான் தீபாவளி தரிசனம்.

சென்ற தீபாவளி பண்டிகையன்று அன்னபூர்ணா அன்னக் கூடத்தில் பக்தர்கள் எல்லோரும் தங்கள் குடும்பத்துடன் பேரன் பேத்திகளுடன் அவரைத் தரிசித்தனர்.

மக்களுக்கு பசி உண்டாகாமல் அன்னம் பாவித்த அன்னபூர்ணாதேவி பிரத்யேக அலங்காரத்துடன் காட்சி அளித்தாள். நம் மனதில் நல்ல எண்ணங்களையே உருவாக்கிக் கொடுக்கும் மஹேஸ்வரன் காசி விஸ்வநாதனை லட்டுத்தேரில் அலங்காரம் செய்து காசிக்குப் போய் தரிசனம் செய்த காட்சியை நம் கண்முன்னே பிரத்யேகமாக நிலைநிறுத்தினார்.

அந்த காட்சியை கண்ணுற்ற பக்தர்களுக்கும் சந்தோஷம். அந்த நன்னாளில் நம்மையெல்லாம் முழு மனதுடன் ஆசிர்வாதம் செய்த குருநாதர் தம்பதிகளுக்கும் சந்தோஷம்.

– ஜய் ஸீதாராம்